977

Approved by the Director of Public Instruction Madr.
**Children's Historical Tales.**

THE

# STORY OF THIRUMALAI NAIKKAR.

*(The Tenth Naik-King of Madura).*

*—Illustrated—*

977
2.21

OFFICE O... 28 JUN 1921 ... MADRAS

BY

N. R. SUBRAMANIA SARMA

*Senior Tamil Pandit,*

*American Mission High School,*

PASUMALAI.

E. M. GOPALAKRISHNA KONE,

*Printer, Publisher & Book-Seller, Madura.*

1921.

Price] *Copy Right Registered.* [2 Annas.

THE EXCELSIOR PRESS, MADURA.

பாலியர் சரித்திரக் கதைகள்.

997

மதுரைக்கு அரசரான

# திருமலை நாயக்கர் சரித்திரம்.

(படங்கள் சேர்ந்தது.)

23 JUN 1921

பசுமலை
அமெரிக்கன் உயர்தர கலாசாலைத்
தலைமைத் தமிழ்ப் பண்டிதர்
நெ. ரா. சுப்பிரமணிய சர்மா
எழுதியது.

இரண்டாம் பதிப்பு.

இ. ம. கோபாலகிருஷ்ணக்கோன்,
புக்ஷாப், புதுமண்டபம், மதுரை.

ரைட்ஸ் ரிஸர்வ்டு.] 1921. [விலை 2 அணா.

INTRODUCTION IN TAMIL

BY

M. R. Ry. C. Narayanaswami Iyer Avl. B. A., L. T.,
*Head Master,*
SETUPATHI HIGH SCHOOL,
MADURA.

---

# முகவுரை.

---

‘திருமலை நாயக்கர் சரித்திரம்’ என்ற இச்சிறு நூலை முழுதும் படித்துப் பார்த்தேன். இது, மதுரைத் தமிழ்ச் சங்கத்துச் செந்தமிழ்ப் பத்திரிகையிலும், சென்னைச் சுதேசமித்திரனிலும் முன் N. R. S. சர்மா எழுதிவிடுத்த இதே விஷயத்தின் எளிய நடையாகும். இது, சிறுவருமுணருமாறு மிகவும் சுலபமான நடையில் இனிமையாய் எழுதப்பெற் றுள்ளது. இத்தகைய சரித்திர நூல்களில்லாமை அப்பாடத்திற்கே ஒருபெருங்குறையாதலின் இதனை எதிர்பாராதார் எவருமிலரென எண்ணுகிறேன்.


பிரதி ஜில்லா சம்பந்தமான வீரர்களையும், அரசர்களையும் பற்றி அறிதல் சுதேச சரித்திரங்கற்க விரும்பும் சிறுவர்க்கவசியமானது. அவர்களைப் பற்றி அறிவதால் தேசாபிமானமுண்டாகும். அன்றியும் ஒரு மாணவன் தனது ஜில்லா சரித்திரம் அறிந்தாற்றான் ஏனைய தேச சரித்திரத்தைப் படித்தற் கவா மிகும்.

இந்நூலாசிரியர் முன் தாமெழுதிய பல புத்தகங்களைப்போலவே, இதனையும் பல சித்திரப் படங்களுடன் வெளியிட்டிருப்பது, உபாத்திமார் தத்தம் மாணாக்கர்களுடன் அப்படங்களுக்குரிய இடங்களுக்குப் போய், அவற்றை நேரிலேயே தம்மாணவர்களைக் கண்ணுறச் செய்வதற்கு இடந்தரும்.


மதுரை ஜில்லாவின் வரலாற்றில் திருமலை நாயக்கர் மிகப் பெயர்பெற்ற அரசராதலின், அவரது சரித்திரம் மூன்றவது நான்காவது வகுப்பு மாணவர்க்கு இன்றியமையாதது. ஆதலால் இதனை அவ்வகுப்புகட்குப் பாடமாக வைப்பின் மிகுதியும் நன்மை பயக்குமெனத் துணிந்து கூறுகிறேன்.

மதுரை.
20—1—16 } C. நாராயணசாமி ஐயர்.

தமிழ்நாடு ... காப்பக நூலக



திருமலை நாயக்கர்



மாரியம்மன் தெப்பக்குளம்.

# திருமலைநாயக்கர் சரித்திரம்.

———:———

திருமலை நாயக்கருடைய பெயரை அறியாதவர் தென் இந்தியாவில் மிகச்சிலரே. மதுரையிலும் மற்றும் பெரியஸ்தலங்களிலும் இவர் நேர்த்தியான பல கட்டடங்களை அமைத்திருக்கிறார் என்பது பிரசித்தம்.

திருமலை நாயக்கரும் அவர் வமிசத்து மற்ற நாயக்க மன்னவர்களும் நாயக்க ஜாதியின் பலபிரிவுகளில் பலிஜ நாயக்கர்களின் வமிசத்தைச் சேர்ந்தவர்கள் என்று சிலர் சொல்லுகிறார்கள்.

மதுரையை ஆண்ட நாயக்கர்களில், திருமலைநாயக்கர் பத்தாவது பட்டத்து அரசர். அவர் தகப்பனார் பெயர் முத்துகிருஷ்ணப்பநாயக்கர். அவர் இறந்துபோனதின்பிறகு அவரது மூத்தபிள்ளையும், திருமலை நாயக்கரின் அண்ணனுமாகிய முத்துவீரப்பநாயக்கர் பதினைந்து வருஷங்கள் அரசாட்சி செய்தார். அவர் இறந்தபிறகு, திருமலை நாயக்கர் பட்டாபிஷேகம் செய்துகொண்டார். இவர் பட்டத்திற்கு வந்தது கி. பி. 1623-வது வருஷமாதலால், இவர் இன்றைக்கு 300 வருஷங்களுக்கு முன் இருந்தவர் என்று தெரிகிறது. இவர் வமிசத்தைச்சேர்ந்த சில குடும்பங்கள் இப்பொழுதும் மதுரை ஜில்லாவில் இருக்கின்றன.

இவருடைய உருவம் அமைந்த கற்சிலைகள் மதுரைப் புதுமண்டபத்துத் தூண்கள் ஒன்றிலும், மீனாக்ஷியம்மன் கோயிலிலும், திருப்பரங்குன்றம், ஸ்ரீவில்லிபுத்தூர், அழகர் கோயில்களிலும் வைக்கப்பட்டிருக்கின்றன. அந்தச் சிலைகளால் திருமலைநாயக்கர் உயரமாயும், பருத்தும், சிறிது

தொந்திபிடித்தும, ராஜ லக்ஷணம் மிகவும் உள்ளவராய்க் காணப்படுகிறார்.

திருமலை நாயக்கர் அரசர் ஆனது முதல், பன்னிரண்டு வருஷம்வரை திருச்சிராப்பள்ளியைத் தலைநகராகக்கொண்டு அங்கு இருந்தார். அதுபோலவே, அவருடைய முன்னோர்களும் திருச்சிராப்பள்ளியில் இருந்தே இந்தப் பாண்டிய நாட்டை ஆண்டுவந்தார்கள். தாம் பட்டத்திற்கு வந்த பதின்மூன்றாவது வருஷம் திருமலைநாயக்கர் ஒரு சமயம் மதுரைக்கு வந்துகொண்டிருந்தார். அவ்வாறு வருகையில் அவருக்கு எப்போதும் இருந்த காசரோகம் கஷ்டப்படுத்தினது. ஆனதுபற்றித் தமது பிரயாணத்தை நிறுத்தித் திண்டுக்கல்லில் தங்கினார். அங்குத் தங்கியிருந்த பொழுது மதுரைத்தெய்வங்களாகிய மீனாக்ஷி அம்மனும், சோமசுந்தரரும் அவருடைய சொர்ப்பனத்தில் தோன்றி, மதுரையை ராஜதானியாக்கிக் கொண்டு, அங்கேயே இருந்து அரசாண்டால், அவருடைய வியாதிநீங்கும் என்றும், அதற்காக விபூதிப் பிரசாதத்தை நாயக்கர் அணியவேண்டும் என்றும் உத்திரவுகொடுத்துவிட்டு மறைந்தார்கள். உடனே திருமலை நாயக்கர் விழித்துக்கொண்டு, நடந்த விஷயங்களைப் பக்கத்திலிருந்த பிராமணர்களிடத்துச் சொன்னார். அவர்கள் தெய்வங்களின் இஷ்டம்போல் நடக்கவேண்டும் என்றார்கள். தம்நோய் நீங்கினால் மதுரையில் இருந்து அரசாள்வதோடு லக்ஷம்பொன் செலவழித்து தேவ ஆராதனைக்கு வேண்டிய கட்டடங்களை அங்குக் கட்டுவிப்பதாயும் நாயக்கர் வாக்குத்தத்தம் செய்தார்.

மறுநாள் காலையில் அரசர் பல் விளக்குகையில் அவரிடத்தில் அந்த நோய் காணப்படாததால் ஆச்சரியமும், ஆநந்தமும் கொண்டு, அங்கிருந்து புறப்பட்டு மதுரை வந்து

சேர்ந்தார். அதுமுதல் மதுரையையே தலைநகராகச் செய்துகொண்டு அங்கேயே இருந்தார். அப்பொழுதுதான் அவர் பல கட்டடங்களை அங்கு முடிப்பித்தார்.

வியாபாரம் புராண சம்பந்தம், பல இடங்களுக்கு நடுவிலிருக்கும் நிலைமை முதலியவற்றால் மதுரைக்கு உள்ள பெருமையைக் காட்டிலும் திருமலை நாயக்கரின் கட்டடங்களால் ஆகியபெருமை கொஞ்சங்கூடக்குறைந்தது இல்லை என்று தைரியமாய்ச் சொல்லலாம்.

தென்னிந்தியா முழுவதிலும் சிறந்த கட்டடங்கள் மதுரையில் இந்த நாயக்கரால் அமைந்து இருக்கின்றன. தென்னாட்டார் சுமார் முந்நூறு வருஷங்களுக்கு முன்னர் சிற்பசாஸ்திரத்தில் சிறந்து இருந்தார்கள் என்பதற்குத் திருமலை நாயக்கருடைய கட்டடங்களே சாக்ஷியாகும். வளைந்த மாடியைக்கொண்ட கட்டடங்கள் கட்டுதற்கு மகம்மதியர்களிடம் இருந்து இந்துக்கள் கற்றுக்கொண்டார்கள் என்று பர்கூஸன் துரை சொல்லுகிறார். அதற்கு அவர் சரியான ஆதாரம் கொடுக்கவில்லை. ஆதலால் அவர் அபிப்பிராயத்தை நாம் நம்ப முடியவில்லை.

மதுரையிலுள்ள திருமலை நாயக்கரின் கட்டடங்கள் விஜய நகரத்தில் இருந்தவற்றைப்பார்த்தே கட்டப்பட்டிருக்கவேண்டும் என்று தெரிகிறது. ஏனெனில் மதுரை நாயக்கர்களெல்லாம் வெகுகாலமாய் விஜய நகரத்திற்கு உட்பட்டு இருந்தவர்கள். ஆதலால் ஒவ்வொரு விஷயத்திலும் தங்கள் சக்கரவர்த்தியையே அவர்கள் பின்பற்றினார்கள். அவர்கள் எவ்வாறு சத்திரம் சாவடி கட்டியும், கிணறு குளங்களைத் தோண்டியும், சாலைகளைப் போட்டும், நாட்டிற்கு நன்மைசெய்தார்களோ, அதுபோலவே, மதுரை

நாயக்கர்களும் செய்தார்கள். இவ்வாறு சக்கரவர்த்தி தர்மங்கள் செய்வதை மதுரை நாயக்கர்கள் பின்பற்றியது போலவே, கட்டடங்கள் கட்டுவதிலும் பின்பற்றினார்கள். அதற்கு ஒரு உதாரணம் மட்டும் சொல்லுவோம்.

விஜய நகரத்தில் 'தமுக்கம்' என்ற பெயரோடு ஒரு கட்டடம் இருந்ததாக பர்கூஸனும், சுவால் என்பவரும் தமது புஸ்தகங்களில் எழுதியிருக்கிறார்கள். அந்தப்பெயருடனே மதுரையிலும் இப்போது தமுக்கக் கட்டடம் இருக்கிறது. அதனுடைய விசேஷத்தைச் சொல்லுவதற்கு முன், அதைப்பார்க்கிலும் சிறந்த, இந்த நாயக்கரின் கட்டடங்களைப்பற்றி அறிவோம்.

---

## மஹால்.

திருமலைநாயக்கரின் கட்டடங்களில்சிறந்தது மஹால். அதன் உட்சென்று பார்த்தவர்களுக்கு அதன் பெருமை விளங்கும். தூரத்துப் பார்வைக்கு அது மிகச்சிறந்ததாய்த் தெரியாது. இது மதுரையின் தென் கிழக்குப் பாகத்தில் இருக்கிறது. நாயக்கர்கள் காலத்தில், மதுரை, கிழக்கு நோக்கி விசாலித்து வந்தது என்பதற்கு மஹாலும், தெப்பக்குளமும் சாக்ஷியாகும்.

இந்த மஹாலை அடுத்துப் பல கட்டடங்கள் இருந்தன என்றும், அவைகள் பின்னால் அழிந்தன என்றும் தெரிகிறது. ஏனெனில், கொஞ்சகாலத்திற்கு முன்னாலே, மஹாலைச் சுற்றி வீடுகள் கட்ட அஸ்திவாரம் தோண்டுகையில் அங்குப் பல நிலஅறைகளும், நிலவழிகளும் காணப்பட்டன. இப்போது இருக்கும் மஹால் பழைய மஹாலின் நான்கில் ஒரு பாகமே இருக்கும் என்று சிலர் அபிப்பிரா

யப் படுகிறார்கள்: மற்றவை அழிந்தனவாம். அழிந்தவைகள் எவைகள் என்று நன்றாய்த் தெரியவில்லை. திருமலை நாயக்கரின் பேரனாகிய சொக்கநாத நாயக்கர் மதுரையில் உள்ள கட்டடங்களை இடித்து அவற்றிலுள்ள சாமான்களால் திருச்சியில் அரமனை கட்டினதாகச் சரித்திரம் கூறுகிறது. ஆதலால் அவரே மஹாலின் மற்றப்பாகங்களை இடித்திருக்கலாம் என்று சிலர் நினைக்கிறார்கள்.

மதுரையிலுள்ள திருமலை நாயக்கரின் மஹாலைப் பார்க்காத கண்களைப் புண்களென்றே சொல்லலாம். "நேபிள்ஸ் நகரத்தைப் பார்த்து விட்டுப் பிறகு இறந்துபோ" என்று ஐரோப்பியர் சொல்லுவார்கள். அதாவது, 'ஒரு மனிதன் சாகுமுன், இடலிதேசத்து அழகிய நகரமாகிய நேபிள்ஸைப் பார்க்கவேண்டும்' என்பதாம். நாம் சொல்வது என்னவென்றால், இந்த நாட்டில் பிறந்த ஒவ்வொருவரும் அவசியம் திருமலை நாயக்கரின் மஹாலைப் பார்த்து விட்டே சாகவேண்டும் என்பதுதான். ஏனெனில், நேபிள்ஸ் நகரத்தைப் பார்த்தவர்களும் மஹாலைப் பார்த்து அதிக ஆச்சரியப்படுகிறார்கள் என்றால், இதன் பெருமை எப்படிப்பட்டது! இப்படிப்பட்ட கட்டடம் நமது தேசத்தில் இருந்தும் அதை நாம் பாராமல் இருக்கலாமா?

இம்மஹாலைக் கண்ணாரப் பாராத ஒருவருக்கு எவ்வளவு சொன்னாலும் அதன் பெருமை தெரியாது. அதன் பிரமாண்டமான தூண்களும், வழுவழுப்பாயும், உயரமாயும், கனமாயும் இருக்கும் [illegible], மேல்மாடத்தின் வில்வ[illegible] இன்னும் அதன் மற்றப்பாகங்களும் எவ்வளவு சிறந்தன!


மஹாலுக்குள் நுழைந்ததும், அங்கு விசாலமான முற்றம் ஒன்று உண்டு. அம்முற்றத்தின் எல்லாப் பக்கங்க

ளிலும் கட்டடங்கள் இருக்கின்றன. அம்முற்றத்திற்கு மேற்கே விசாலமான பெரிய அலங்கார மண்டபம் இருக்கிறது. அதில் இப்போது ராமநாதபுரம் ஜில்லா கோர்ட்டு நடைபெறுகிறது. அதுமிகவும் விசித்திரமானது. அது அக்காலத்தில் சபா மண்டபமாய் இருந்திருக்கலாம் இதற்கு வடக்கே ஒரு சிறு வழி உண்டு. அதன் வழிச்சென்றால் அங்கும் ஒரு அழகான மண்டபமிருக்கின்றது. அதில் இப்பொழுது மதுரை ஸப்கோர்ட்டு நடக்கிறது. சபாமண்டபத்திற்குக் கொஞ்சதூரம் தெற்கேபோய், மேற்கே திரும்பினால் அங்கு நேர்த்தியான ஒரு கட்டடம் இருக்கிறது. அதில் மதுரை ஜில்லாகோர்ட்டு இருக்கிறது. இனி மஹாலின் மாடி முதலியவற்றின் பெருமைகளை நம்மால் இச்சிறு புஸ்தகத்தில் எழுதிமுடியாது.


அரங்கவிலாசம், சந்திரமேடை, ராஜசிறைச்சாலை, ஆயுதச்சாலை, குளம், ஆகிய பல கட்டடங்கள் மஹாலின் சிலபாகங்களாம். அவற்றில் இந்தப்பாகத்திற்கு இன்ன பெயரென்றும், அது இப்பொழுது இருக்கிறதா என்றும் நன்கு தெரியவில்லை.

மஹாலின் கட்டடங்கள் உத்திரங்களின்றியும், சுண்ணாம்பாலும், செங்கல்லாலும் அமைக்கப்பட்டு இருக்கின்றன. இப்போதுள்ள மஹாலின் அறைகள் நமது ராஜாங்கத்தாரால் மரப்பலகை முதலியவற்றால் ஏற்படுத்தப்பட்டனவாம். நாயக்கர் [illegible] பின் ஒருவரும் தேடாத இம்மஹாலைச் சென்னை கவர்னரா [illegible] என்பவர் சீர்திருத்தி, இப்போதுள்ள நிலைமைக்குக் கொண்டு வந்தார்.

---



ம ஹா ல்.



புதுமண்டபம், மதுரை.

## புதுமண்டபம்.

இது மதுரையின் மத்தியிலும், மீனாக்ஷியம்மன் கோயிலின் கிழக்கிலும் அமைந்திருக்கிறது. திருமலை நாயக்கர் காலத்திற் புதிதாய்க் கட்டப்பட்டதால் புதுமண்டபம் என்றும், வசந்த உற்சவம் நடக்கிறதால், வசந்தமண்டபம் என்றும் இதற்குப் பெயர்கள் உண்டு. பர்கூஸன் இதைத் "திருமலை நாயக்கரின் சத்திரம்" என்றார். சத்திரத்துக்கும், மண்டபத்துக்கும் உள்ள வித்தியாசம் தெரியாததால் அவர் இதற்குச் "சத்திரம்" என்று பெயர் கொடுத்ததாகத் தெரிகிறது.

இதுநீண்ட சதுர வடிவமாய் இருக்கிறது. இதன் நீளம் 105 கஜம்; அகலம் 33 கஜம்; மண்டபத்தைச்சுற்றி நான்கு பக்கங்களிலும் தண்ணீர் தங்கும்படி கல்லால் அகழ் கட்டப்பட்டிருக்கிறது. கிழக்கு மேற்காய் இதில் 4 வரிசைத் தூண்கள் உண்டு. அவற்றில் மத்தியிலுள்ள இரு வரிசைத் தூண்கள் சிலவற்றில், விசுவநாத நாயக்கர்முதல் திருமலை நாயக்கர்வரை மதுரையை ஆண்ட நாயக்கர்களின் உருவங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. வேறு சில சிலைகள் மண்டபத்தின் முன்வரிசைத் தூண்களில் மிகுந்த வேலைப்பாடுடன் வெகு அழகாய்ச் செய்யப்பட்டு இருக்கின்றன. புருஷ ஆயுசில் இப்படிப்பட்ட கட்டடம் முடிக்க முடியுமோ என்று எண்ணக் கூடியதாய் இது அமைந்திருக்கிறது. 22 வருஷங்களில் 20 லக்ஷம் பொன் செலவில் இது முடிக்கப்பட்டதாம்.

இதன் மேற்குப் பாகத்தில் வழுவழுப்பான கறுப்புக் கல்லால் ஆகிய ஒரு சிறு மண்டபம் இருக்கிறது. மார்கழி மாதம் எண்ணெய்க்காப்புத் திருவிழாவும், வைகாசி மாதம்

வசந்த உற்சவமும் இதில் நடக்கும். அக்காலங்களில் இது நன்கு அலங்கரிக்கப்படும். திருவிழா இல்லாத சமயத்தில், இம்மண்டபத்து 3 பத்திகளில் வெளி இரண்டிலும் சிட்டி, ஜவுளிக் கடைகளும், தையற்காரர் கடைகளும் விசேஷமாய்க் காணப்படும். மத்தியிலுள்ளபத்தி, இரும்புக் கம்பிகளால் சமீபகாலத்தில் வேலியிடப்பட்டது. மண்டபத்துக்கு வடக்கிலுள்ள வரிசையான அறைகளில் புஸ்தகக் கடைகளும், தெற்கிலுள்ள அறைகளில் பாத்திரக்கடைகளும் இப்போது இருக்கின்றன.

ராயகோபுரமென்பது புதுமண்டபத்துக்குக் கிழக்கிலுள்ள முற்றுப்பெறாத ஒரு கோபுரம். தமது விஜய நகர சக்கரவர்த்தியின் ஞாபகார்த்தமாகத் திருமலைநாயக்கரால் கட்டப்பட்டதால் இதற்கு இப்பெயர் வந்தது. இது முழுதும் கல்லால் கட்டப்பட்டது. இதைப்போன்ற 64 கோபுரங்களுக்குத் திருமலைநாயக்கர் ஒரே முகூர்த்தத்தில் அஸ்திவாரம் போட்டார் என்றும், அவற்றில் ஒன்றேனும் முடிவு பெறவில்லை என்றும் சொல்லிக்கொள்ளப்படுகிறது ஆனல், இப்போது சிலவே ஆங்காங்குக் காணப்படுகின்றன. ஒருவன் முடியாத காரியத்தில் முயற்சித்தால் அவன் செய்கையை "ராயகோபுரத்திற்கு அடிப்போட்டாற்போல்" இருக்கிறது என்பார்கள். திருமலை நாயக்கரிடம் பணமில்லாமையாலோ அல்லது அவர் இறந்ததினலோ இக்கோபுரங்கள் முற்றுப்பெறுதிருந்திருக்க வேண்டும். இவைகளே முற்கூறியதற்குக் காரணங்கள்.

ஆனல் சிலர் இதையறியாமல் வேறு தவறுன கதைகள் சொல்லுகிருர்கள். இக்கோபுரத்தில் வைத்துக்கட்டிய ஒரு தூணில், தேரை ஒன்றிருந்தமையாலும் அது கட்

டடத்திற்கு உபயோகப்படாததாலும், அந்தத்தூணை நீக்கி விட்டு, வேறொன்று வைக்கமுடியாது ஆதலாலும் இது முடிவு பெறவில்லை என்று ஒரு கதை சொல்லுகிறார்கள்.

மதுரை ராயகோபுரம் இவ்வாறு தடைப்பட்டிருந்தால், ஸ்ரீரங்கத்திலிருக்கும் இதைப் போன்ற கோபுரம் ஏன்முற்றுப்பெறவில்லை? அதிலுமோ தேரை யிருந்தது? இன்னும் இந்த மாதிரி பல கதைகள் உண்டு. அவைகள் எல்லாம் சோம்பேறிகள் கட்டுக்கதைகளே.

## தெப்பக்குளம்.

முற்கூறியவைகளில் பெருமையிலும், அழகிலும் எள்ளளவும் குறையாத மற்றொன்றும் மதுரையிலுண்டு. அது தான் மதுரைக்குக் கிழக்கே இரண்டு மைல் தூரத்திலுள்ள பெரிய தெப்பக்குளம். மாரியம்மன் கோயிலின் பக்கத்திலிருப்பதால் மாரியம்மன் தெப்பக்குளமென்றும், வண்டியூருக்குச் சமீபமாய் இருப்பதால் வண்டியூர்த் தெப்பக்குளமென்றும் இதற்கு வேறு பெயர் உண்டு. இதுவே தென்னிந்தியாவின் குளங்களில் மிகப்பெரிதாம். இது 950 அடி நீளமும், அவ்வளவு அகலமுமுள்ள சதுரமாயிருக்கிறது. திருமலை நாயக்கர் மஹால் கட்டும்போது அதற்குவேண்டிய செங்கற்களுக்காக ஒருபள்ளம் தோண்டப்பட்டதென்றும், அது மிகப்பெரிதாய் இருந்தபடியால் பிறகு தெப்பக்குளமாய்க் கட்டப்பட்டதென்றும் சிலர் சொல்லுகிறார்கள்.

இக்குளத்தைச் சுற்றிலும் கைபிடிச்சுவர்கள் கற்களால் எடுக்கப்பட்டு இருக்கின்றன. அந்தச்சுவர்களைச் சுற்றி உட்பக்கத்தில் இருவர் நடந்து போகக்கூடிய பாதை கருங்கல்லால் குளத்தின் நான்கு பக்கங்களிலும் கட்டப்

பட்டிருக்கிறது. குளத்தின் நான்கு பக்கங்களிலும் படித்துறைகள் வேண்டியபடி ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றன. குளத்தின் மத்தியில் தீவுபோன்ற ஒரு மேடை உண்டு. அதன் மத்தியில் ஒரு பெரியகோயிலும் அதில் ஒரு பெரிய கோபுரமும், மேடையின் நான்கு மூலைகளிலும் நான்கு சிறு கோபுரங்களும் உண்டு. அந்த மேடையில் கோயிலைத் தவிர மற்றப்பாகத்தில், மா, பலா, தென்னை, வாழை, முதலியன பயிராக்கப்பட்டு இருக்கின்றன. இந்தக் குளத்தில், பிரதி தை மாதமும் பூசநக்ஷத்திரத்தன்று மீனாக்ஷிசுந்தரேசுவரருக்குத் திருவிழா நடக்கும். அது இரவில் நடக்கிறதால், குளக்கரைகளிலும் கோபுரங்களிலும் தீபங்களும் மத்தாப்புக்களும் எரியும். அப்பொழுது இக்குளத்தின் அழகு வெகுநேர்த்தியாய் இருக்கும்.

இத்திருவிழா திருமலைநாய்க்கரின் ஜன்ம நக்ஷத்திரத்தன்று நடக்கின்றதாம்.

தமுக்கம் என்பது வைகை நதியின் வடக்குக்கரையில் இருக்கும் ஒரு கட்டடம். தெலுங்கு பாஷையில் தமுக்கம் என்பதற்குக் "கோடைகாலத்தில் வசிக்கும் இடம்" என்று பொருளாம். கர்ண பரம்பரையிற் கேள்விப்பட்டதிலிருந்தும் நெல்ஸன் துரை சொல்வதிலிருந்தும் இது திருமலைநாயக்கரால் கட்டப்பட்டதென்று தெரிகிறது. ஆனால், அதில் புதிதாய் அமைக்கப்பட்ட ஞாபகச்சின்னத்தைத் தெரிவிக்கும் கற்பலகை இதை மங்கம்மாள் கட்டினதாகத் தெரிவிக்கிறது. அக்காலத்திய அரசர்கள் கோடையில் இதில் இருந்தார்கள். இதையடுத்து புலி, கரடி முதலியவற்றிற்கு லாயம் ஏற்படுத்தப்பட்டிருந்ததாம். இப்போது இதில் மதுரை ஜில்லா கலெக்டர் வசிக்கிறார்.

மதுரை மீனாக்ஷியம்மன் கோயிலின் சில பாகங்கள் திருமலைநாயக்கரால் கட்டப்பட்டன. வேறுபல நன்கு புதுப்பிக்கப் பட்டுள்ளன. ஆயினும் அவர் எவற்றைப் புதுப்பித்தார் என்று நன்றாய்த் தெரியவில்லை. மீனாக்ஷி கோயிலின் கோபுரங்கள் வரலாற்றைப் பார்க்கில், இவரால் கட்டப்பட்டன அல்ல என்பதற்கு ஆதாரங்கள் பல இருப்பதால், அவை நாயக்கருக்கு வெகு காலத்துக்கு முன்னரே இருக்கின்றன என்று தெரிகிறது.

இதுவரை நாம் சொன்னவைகளே திருமலை நாயக்கர் மதுரையில் நிர்மித்த கட்டடங்களாம். இவற்றைத் தவிர ஸ்ரீரங்கம், ஸ்ரீவில்லிபுத்தூர் அழகர் கோயில், திருப்பரங்குன்றம் முதலிய பல இடங்களில் கணக்கிலடங்காத கட்டடங்களை இவர் அமைத்திருக்கிறார்.

இதுவரை இந்த நாயக்கரின் கட்டடங்களைப்பற்றிச் சொன்னோம். இனி அவர்காலத்தில் நடந்த பெரிய யுத்தங்களைப் பற்றிச் சொல்வோம்.

திருமலை நாயக்கர் தம்முடைய முன்னோர்களைப்போல விஜயநகர சக்கரவர்த்திக்கு உட்படாமல் நாட்டை ஆள ஆரம்பித்தார். ஏனெனில், அவர் காலத்தில் சக்கரவர்த்தி முகம்மதியர்களின் இமிசைக்கு உட்பட்டிருந்ததால், அவருடையசெல்வாக்கு குறைந்திருந்தது. ஆதலாலேதான் திருமலைநாயக்கர் சுவேச்சையாய் இருக்க எண்ணினர். நாயக்கர் இப்படிச் செய்ததை விஜயநகரத்தார் அறிந்திருந்தும், தமது சக்திக்குறைவால் அவரை அச்சமயம் எதிர்க்காமல் இருந்தார். ஆகிலும், மதுரை நாயக்கர்களைப்போல அச்சக்கரவர்த்திக்கு உட்பட்ட பல அரசர்களில் மைசூர் அரசராகிய சாமராஜ உடையார் ராஜபக்தி மேலிட்டவராதலா

லும், திருமலைநாயக்கரின் தமையன் காலமுதலே இவ்விரண்டு நாடுகளுக்கும் பகைமை ஏற்பட்டிருந்ததாலும் அவர் திருமலை நாயக்கரோடு போர்தொடங்கினர். இதுவே இந்த நாயக்கர் முதலில் தொடங்கிய சண்டை.

முதலில் மைசூர்ச்சேனை ஹரசுரநந்தி ராஜாவின் தலைமையின் கீழ், பலகுன்றுகளைக் கடந்து, கடைசியில நாயக்க நாடாகிய சத்தியமங்கலம் தாலூகாவிலும், அதைச்சுற்றிய பாகத்திலும் தங்கியது. பின்பு மெல்லமெல்லத் திண்டுக்கல் கோட்டையையும் வந்து எதிர்த்தது.

அதைக்கேட்ட திருமலை நாயக்கர் தமது தேசத்தில் மகா வீரரென்று பெயர் பெற்ற தளவாய் ராமப்பையர் என்ற பிராமணர் வசம் ஒரு பெரும் சேனையை அனுப்பினர். அந்த ராமப்பையர் திண்டுக்கல்லை எதிர்த்த மைசூர்ச் சேனையைத் தோற்கடித்துவிட்டார், விரோதிகள் பயந்து, குதிங்கால் பிடரியில் அடிக்க ஒரே ஓட்டமாய்த் தமது நாட்டுக்கு ஓடினர்கள். ராமப்பையர் அவர்களைப் பின் தொடர்ந்து, மைசூரின் தலைநகரத்தை முற்றுகை இட்டார். அப்போது விரோதிகள் நடுங்கிவிட்டார்கள்.

இதற்குள் அத்தளவாயிடம் பகைமைகொண்ட சிலர் அவரைப்பற்றிக் கெடுதலாகத் திருமலைநாயக்கரிடம் கோள் மூட்டினர்கள். நாயக்கர் அவர்களுடைய வார்த்தையைக் கேட்டுக்கொண்டு, தளவாயை உடனே மதுரைக்குத் திரும்பும்படி உத்திரவு அனுப்பினர். ஆயினும் அந்தத் தளவாய் தாமெடுத்த காரியத்தைத் தளரவிடாமல் ஜயத்துடன் மதுரைக்குத் திரும்பிவந்து நாயக்கருக்குச் சந்தோஷத்தைக் கொடுத்தார். இம்மட்டோடு மைசூர் முதற்சண்டை முடிந்தது.

இனிச் சேதுபதிகள் சம்பந்தமாய் நாயக்கரின் செய்கைகளைப் பார்ப்போம். நாயக்கர்கள் காலத்தில் சேதுபதிகள் அவர்களுக்கு உட்பட்டே இருந்தார்கள். அக்காலத்துச் சேதுபதியாகிய சடையத்தேவர் தமது தத்துப் புத்திரனுடைய மகனுக்குப் பட்டம் கட்டினார். அவர் இறந்ததும், தம்பி என்பவர், தாமே இறந்த சேதுபதியின்பிள்ளையென்று சொல்லிக்கொண்டும், நாடு தன்னைச் சேரவேண்டுமென்றும் திருமலை நாயக்கரிடம் முறையிட்டார். உடனே நாயக்கர் பெரிய சேனையொன்றைத் தம்பி வசம் அனுப்பினார். அப்போது இருந்த தளவாய்சேதுபதி, தம்பியைத் தோற்கடித்துவிட்டார். அதைக்கேள்விப்பட்ட திருமலை நாயக்கர் கோபங்கொண்டு, பெரிய சேனையோடு தளவாய் ராமப்பையரை அனுப்பினார். உடனே தளவாய்சேதுபதி ராமேசுவரத்துக்குப்போய் அங்கு ஒளித்துக்கொண்டார். அச்சமயம் ஏதோ காரணத்தால் ராமப்பையர் திடீரென்று இறந்து, நாயக்க நாட்டிற்குப்பெரிய வருத்தத்தை உண்டாக்கினர்.

அவருக்குப் பின்வந்த தளவாய் ராமேசுவரம்போய், சேதுபதியைச் சிறைப்படுத்தி, மதுரைக்குக் கொண்டுவந்தார். உடனே தம்பி சேதுபதி ஆக்கப்பட்டார். ஆனால் அவர் பலமில்லாதவர். ஆதலால், சேதுநாட்டில் கொலையும், களவும் குடிகொண்டன. ராமேசுவர பாத்திரிகர்களுக்கு வழியில் மிகுந்த கஷ்டம் உண்டானது. அவர்கள் திருமலை நாயக்கரிடம் விஷயங்களைத் தெரிவித்தார்கள். நாயக்கர் இதற்கெல்லாம் தாமேகாரணஸ்தர் என்று அறிந்து சிறைப்படுத்தியிருந்த சேதுபதியை விடுதலை செய்து, அவரைச் சேதுபதி ஆக்கினர். அன்று முதல், சேதுநாடு சமாதானமாய் இருந்தது.

முன்னாலே திருமலை நாயக்கருக்கும், சக்கரவர்த்திக்கும் இருந்த சம்பந்தத்தைச் சொன்னோம் அல்லவா? அச்சக்கரவர்த்தி கொஞ்சகாலத்துக்குள் பலம் அடைந்து, தென்னாட்டுச் சிற்றரசர்களை எல்லாம் தண்டிக்க எண்ணினார். அவர் முதலில் ஜெஞ்சிக்கோட்டையை எதிர்த்தார். திருமலை நாயக்கர் ஜெஞ்சி, தஞ்சாவூர் நாயக்கர்களோடு சதி ஆலோசனை செய்துகொண்டு, சக்கரவர்த்தியை ஜயிப்பதற்குச் சேனையொன்றைச் சண்டைக்கு அனுப்பினார்.

அச் சண்டையில் சக்கரவர்த்தி ஜயமடைந்தார். மதுரைச் சேனையானது ஜெஞ்சிச் சேனையோடு சேரமுடியாமல் சக்கரவர்த்தி செய்துவிட்டார். ஆதலால், திருமலை நாயக்கரின் எண்ணம் முற்றுப்பெறவில்லை.

இவ்வாறு அபஜயமுற்ற நாயக்கர் அவமானமடைந்து, தமக்கு உதவிசெய்யும்படி கோலகொண்டா சுல்தானைக் கேட்டார். அந்தச் சுல்தான், அதுவே தமக்கு நல்லசமயம் என்று எண்ணி, தம்முடைய பழையவிரோதியாகிய சக்கரவர்த்தியின் நாட்டை வடக்குப் பக்கத்தில் எதிர்த்தார். தம் நாட்டைக்காப்பாற்றுவதற்காகச் சக்கரவர்த்தி தென்னாட்டிலிருந்து போய்விட்டார். அவருக்கும், சுல்தானுக்கும் வெகுகாலம் சண்டை நடந்தது. அதனால் ஒருவருக்கும் ஜயம் உண்டாகவில்லை.

முடிவில், முகம்மதியர் ஜெஞ்சிக்கோட்டையைப்பிடித்துக்கொண்டு, மதுரையைத் தாக்கினார்கள். தம்முடைய சிநேகிதரே தமக்குச் செய்த மோசத்தால் வருத்தமடைந்த திருமலை நாயக்கர், கோலகொண்டா சுல்தானுக்கு விரோதமாய் பீஜப்பூர் சுல்தானிடம் உதவி வேண்டினார். பீஜப்பூர் சுல்தான் முதலில் நாயக்கருக்கு உதவி செய்வதாய்ப்

பாசாங்கு செய்து, கடைசியில் தம் சேனையையே முற்கூறிய சுல்தானுடைய சேனையோடு சேர்த்துக்கொண்டார். இருவருமாக மதுரையை எதிர்த்தார்கள். நமது முன்னோர்கள் சொன்ன "முற்பகல் செய்யில் பிற்பகல் விளையும், பிறர்க்கின்னாவித்தி வினைவிளைப்பக்காண்டலில், பித்துமுளவோ பிற" என்ற பழமொழிகள் நாயக்கருக்கு ஏற்றவைகளாயிருந்தன.

இச்சமயத்தில் பெரிய சேனையோடு சக்கிரவர்த்திவந்து திருமலைநாயக்கருக்கு உதவிசெய்தார். அவர் எவ்வளவோ உதவி செய்தாலும், நாயக்கரின் சேனைக்குள்ளேயே குழப்பங்கள் ஏற்பட்டதால் அவருக்கு ஜயம் உண்டாகவில்லை. ஆனாலும் சக்கரவர்த்தி வந்து உதவி செய்யாவிட்டால் மதுரையை முகம்மதியர் பாழாக்கியிருப்பார்கள். கடைசியாக, நாயக்கர் மிகுதியான பணம் கொடுத்தும், பிரதி வருஷமும் பீஜப்பூர் சுல்தானுக்குக் கப்பம் கட்டுவதாய் ஒப்புக்கொண்டும், முகம்மதியரைச் சமாதானப்படுத்தி அனுப்பினார்.

இதற்குள் சக்கரவர்த்தி மறுபடியும் சேனையைத் திரட்டினார், மைசூர் அரசர் அவருக்கு உதவி செய்தார். அவ்வாறு உதவி செய்யும் மைசூர் ராஜனைக் கண்டிக்கும்படி திருமலைநாயக்கர் கோலகொண்டா சுல்தானை ஏவினார். அந்தச் சுல்தான் மைசூரைச் சூறையாடினபிறகு, மதுரைக்குத் திரும்பிவந்து, அதை நிர்மூலமாக்க ஆரம்பித்தார் உடனே திருமலைநாயக்கர் அவருக்கு ஏராளமான பணத்தைக்கொடுத்து, நல்ல வார்த்தைசொல்லி அனுப்பினார்.

இது நடந்த சிறிது காலத்துக்குப் பிறகு, தம்மேல் முகம்மதியரை ஏவியதற்காக மைசூர் மன்னர் பெரியசேனை

யோடு திருமலைநாயக்கரை எதிர்த்தார். நாயக்கரால் எக்காரியமும் முடியவில்லை. முடிவில், அவர், சேதுபதிக்கு ஒரு கடிதம் எழுதுவித்துத் தமக்கு உதவி செய்யும்படி கேட்டுக் கொண்டார். சேதுபதி, தமக்கு நாயக்கர் முன்செய்த தீங்கை எண்ணாது, பெரிய சேனையோடு வந்து, மைசூர் அரசனைத் தாராபுரம்வரைத் துரத்தித் துரத்தியடித்தார். அப்படிச் செய்த சேதுபதிக்குத் தமது தந்தப் பல்லக்கையும், திருமலைசேதுபதி என்ற பட்டத்தையும், திருச்சுழி திருப்பூவணம், பள்ளிக்கூடம் முதலிய இடங்களையும் நாயக்கர் கொடுத்தார்.

கொஞ்சகாலத்துக்குப் பிறகு, திருமலை நாயக்கரின் தம்பியாகிய குமாரமுத்து நாயக்கர் பெரியசேனையோடு மைசூருக்குப்போய், அந்த அரசனுடைய மூக்கை அறுத்துக்கொண்டு, மதுரைக்குத் திரும்புமுன் நாயக்கருடைய ஆட்சி 1659 கி. பி. யில் முடிந்தது. அப்பொழுது அவருக்கு வயது எழுபத்தைந்து. எனவே அவர் 36 வருஷங்கள் ஆட்சி புரிந்தார்.

இந்த நாயக்கர் தொடங்கிய சண்டைகளைப் பற்றிச் சிறிது கூறாமல் இருக்கக் கூடவில்லை. முதலில், இவர் தமது சக்கரவர்த்திக்கு விரோதமாய் நடந்தது சரியான காரியம் இல்லை. ஏனெனில், சக்கரவர்த்திக்கு உட்பட்ட வேறு எந்தச் சிற்றரசர்களைப் பார்க்கிலும் மதுரை நாயக்கர்களிடத்தில் அவர்கள் அதிக அன்பு பாராட்டி வந்திருந்தார்கள். அதையாமெழுதியிருக்கும் பாண்டியதேச நாயக்கமார்கள் வரலாறு என்னும் நூலிற் கண்டுகொள்க.

சக்கரவர்த்தி, முகம்மதியரோடு சண்டைபிடித்து கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கையில், அவருக்கு வேண்டிய உதவி செய்யக் கடமைப்பட்ட மதுரை நாயக்கர் அவருக்கு

அடங்காமல் இருந்ததோடு, அவரோடு சண்டைக்குப் போவதும் சரியா? இதனால் அல்லவா 'தான் வெட்டிய குழியில் தானே விழுவதுபோல்' இந்த நாயக்கர் முகம்மதியருக்குக் கப்பம் கட்டவும், வெகுகாலமாய் இந்துக்களால் ஆளப் பட்ட பாண்டியநாடு முடிவில் முகம்மதியர் கையிற் சிக்கவும் நேர்ந்தது? இனி நாயக்கர் வமிசம் வேரோடு தொலையவும் இதுவே காரணம்.

திருமலை நாயக்கர் இப்படிப்பட்ட காரியங்கள் செய்திராவிட்டால் தென்னிந்திய சரித்திரம் இப்பொழுது இருப்பதிலும் மாறுபட்டிருக்கும் என்று எண்ணக் கூடியதாயிருக்கிறது.

நாயக்கர்கள் எல்லாம் பிறப்பால் வைஷ்ணவர்கள் என்பது வெளிப்படை ஆகையால் திருமலை நாயக்கரும் வைஷ்ணவரே. வைஷ்ணவர் என்பவர்கள் விஷ்ணுவே முழுமுதற் கடவுள் என்று கொண்டாடுகிறவர்கள். திருமலை நாயக்கர் இம்மதத்தைப் பின்பற்றியவரா யிருந்தாலும், சைவமதத்தைத் தூஷித்தவ ரல்லர். அந்த விஷயம் அவர் சிவன் கோயிலுக்காகக் கட்டிய கட்டடங்களால் நன்றாய் விளங்கும்.

இவர் இந்து மதத்தைச் சேராத மற்ற மதத்தவர்களை வெறுக்கவே யில்லை. அவர்களுக்கு வேண்டிய நன்மைகளைச் செய்து வந்தார். இவர் காலத்தில் ரோமன் காதலிக் பாதிரிமார் பல இந்துக்களைக் கிறிஸ்தவர்களாக ஆக்கினார்கள். மதுரையில் மறியாள்கோயிலும் கட்டினார்கள். ஆனால் இவருக்கு முன்னிருந்த நாயக்கர்கள் இந்த ஏற்பாட்டிற்குச் சிறிதும் இடம் கொடுக்க வில்லை.

இதனால், சிலர் இந்த நாயக்கர் கிறிஸ்தவ மார்க்கத்தில் சேர்ந்தாரோ என்று சந்தேகிக்கிறார்கள். அவ்வாறு சந்தேகப் படுவதற்குக் காரணமேயில்லை. பின்னே கிறிஸ்தவர்கள் தங்கள் மார்க்கத்தைப் பரவச்செய்வதற்கு இவர் இடம் கொடுத்திருப்பாரோ என்றால், இந்துக்கள் சிலமதத்தார்களைப்போல மற்ற மதங்களைத் தூஷிக்க மாட்டார்கள். எம்மதமும் அம்மதத்தின் கிளையாக நினைப்பார்கள். ஆதலால், நாயக்கர் கிறிஸ்தவர்களை வெறுக்கவில்லை. இவர் கிறிஸ்தவரா யிருந்தால் அந்த மார்க்கத்தின் முன்னேற்றத்தைப் பற்றி ரோமாபுரிக்கு அடிக்கடி கடிதம் எழுதிவந்த பாதிரிமார்கள் இந்த விஷயத்தைக் குறித்து எழுதாமல் இருப்பார்களா? அப்படி கடிதம் எழுதியதாகத் தெரியாததால், இந்த நாயக்கர் இந்துவே. இந்த விஷயத்தை இந்து கோயில் திருவிழாக்களுக்குப் பல மண்டபங்களும் கட்டி, நிலமானியங்களும் விட்ட தன்மை நன்கு தெரிவிக்கிறது. முதலில் இந்துவாயிருந்து, பிறகு கிறிஸ்தவரா யிருக்கக் கூடாதோ என்றால் அவ்வாறு இருந்தால் அந்த விஷயத்தைப் பூர்விக சரித்திரக்காரர் வெளியிட்டிருப்பார்கள். அப்படிப்பட்ட சரித்திரம் இல்லை. இதற்கு முன், அவரை இந்து என்றே கிறிஸ்தவர்களும் எழுதி யிருக்கிறார்கள்.

இந்த நாயக்கர் காலத்தில், மதசம்மந்தமாய் ஒரு கலகம் நடந்திருக்கிறது. அது சைவர்களுக்கும், வைஷ்ணவர்களுக்கும் உண்டானது. புதுமண்டபத்தில் ஏகபாத மூர்த்தியின் விக்கிரகமுள்ள ஒரு தூணைச் சைவர் வைக்க விரும்பினார்கள். அவ்வாறு வைக்கக்கூடாதென்று வைஷ்ணவர்கள் தடுத்தார்கள். இரு கட்சியாரும் தங்கள் வழக்கை நாயக்கரிடம் சொன்னார்கள். அவர் அதைத் தக்க பண்டிதர்களைக்கொண்டு, விசாரித்து நியாயம் கொடுத்தார்.

### நாயக்கரும் கல்வியும்.

இவ்வரசர் நாயக்கர் ஆதலால், இவர் தாய்ப்பாஷை தேனினும் இனிய தெலுங்கே. ஆயினும் இவர் தமிழ் நாட்டிற் பிறந்து, அங்கேயே வளர்ந்ததால் தமிழ்ப்பாஷையைப் படிக்கும் பாக்கியமும் அவருக்குக் கிடைத்தது. இந்த விஷயம் சரித்திரத்தாலும் வெளியாகிறது. அக்காலத்தில் பெரும் தமிழ்ப் புலவர்களா யிருந்த பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் அவர்களும், குமரகுருபர ஸ்வாமிகளும் திருமலை நாயக்காருடைய சமஸ்தான வித்வான்களா யிருந்தாரென்று தெரிகிறது. ஆதலால் தமிழையும், தமிழ்ப்புலவர்களையும் இவ்வரசர் ஆதரித்தார் என்று விளங்குகிறது.

இனி நாயக்கர்கள் காலத்தில் கல்வி எவ்வாறு நடைபெற்றதென்று பார்ப்போம். பிராமணர்கள் மட்டும் மற்ற வகுப்பாரைப் பார்க்கிலும் அதிகமாய்க் கல்வி கற்றூர்கள். கி. பி. 1610-ல் நோபிலி பாதிரியார் தம் நாட்டிற்கு எழுதிய கடிதத்தில், அவ்வருஷம் மதுரை சர்வகலாசாலையில் 10000 பிராமணர்கள் கல்வி கற்று வந்ததையும், அக் கல்வியால் உண்டாகும் செலவில் பெரும்பாகத்தைச் சக்கரவர்த்தியும், சிறுபாகத்தை மதுரை நாயக்கர்களும் கொடுத்துவந்ததையும் தெரிவித்திருக்கிறூர். இந்தக் கல்விச் சாலையைத் தவிர, மற்ற எதுவும் ராஜாங்கத்தாரால் ஆதரிக்கப் படவில்லை. ஆனல், சில கிராமங்களில் சிறு பள்ளிக்கூடங்கள் உண்டு. அவைகள் அந்தந்தக் கிராமவாசிகள் உதவியால் நடைபெற்றன. இப்பொழுதும் அப்படிப்பட்ட பள்ளிக்கூடங்கள் சில கிராமாந்தரங்களில் உண்டு.

### ராஜரீகம்.

உத்தியோகஸ்தர்கள்:—ஆதிகாலம் முதலே இந்திய அரசர்களுக்குச் சில உத்தியோகஸ்தர்கள் இருந்தார்கள்.

அவர்களில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு இலாகாவிற்குத் தலைவராயிருந்தார்கள். அவர்களில் முதல்வன் மந்திரி. இக்காலத்தில் மந்திரிகளுக்கு எவ்வளவு செல்வாக்கு உண்டோ, அதனிலும் அக்காலத்திய இந்திய மந்திரிகளுக்கு அதிகமாயிருந்ததாகத் தெரிகிறது. ஒரு தேசத்தோடு சண்டையாவது, சமாதானமாவது அரசன் செய்ய எண்ணினால், அதற்கு மந்திரியின் சம்மதம் அவசியம் வேண்டும். ஏதேனும் ஒரு புதிய சட்டம் ஏற்படுத்துவதானாலும், பழைய சட்டங்களைப் புதுப்பிப்பதானாலும் மந்திரி சம்மதித்தால்தான் அரசன் செய்யலாம். சுருக்கிச்சொன்னால், அரசன் செய்யும் அற்பவிஷயமும் மந்திரியின் சம்மதத்தால்தான் நடக்கவேண்டும். அம் மந்திரி வரும்பொருள் உரைக்கக்கூடிய புத்திக்கூர்மையுடையவனாய் இருப்பான். மந்திரிக்கடுத்த உத்தியோகஸ்தன் தந்திரி - அதாவது சேனைத்தலைவன். அவன் தேசச்சேனைகளைச்சரியாய்ப் பழக்குவான். ராஜத் துரோகிகளையும், ராஜ விரோதிகளையும் கண்டுபிடித்து, தண்டனைக்கு உள்ளாக்குவான். அவனுக்கு அடுத்த உத்தியோகஸ்தன் பிரதானி. அவன் ராஜ்யத்தின் பணச்சம்மந்தமான விஷயங்களை மேற்பார்ப்பான். ராயசன் அரசனது அந்தரங்க உத்திரவுகளையும், காரியக் குறிப்புகளையும் எழுதிவைப்பவன். இவனே அரசனுடைய அந்தரங்கக் காரியதரிசி. கணக்கன் தேசத்தின் காசறையின் (கஜானா)வின் வரவு செலவுகளைச் சரிபார்ப்பவன். இவன் கணக்கில் மகா நிபுணனாயிருப்பான். ஸ்தானீகன் அல்லது தூதன் மாறு வேஷத்தோடு வெளித்தேசங்களுக்குப் போய் அங்குள்ள வர்த்தமானங்களை அப்போதைக்கப்போது தன் அரசனுக்குத் தெரிவிப்பவன். சில வேளைகளில், தன் அரசன் உத்திரவின்படி வேறொரு அரசனிடம்

தூது போவான். ஆதலால், இவன் சமயத்திற்கு ஏற்ற ஆலோசனையோடு, வெகு சாதுரியமாய்ப் பேசக்கூடியவனு யிருப்பான். நாயக்கர்கள் காலத்தில், இந்த முறை கொஞ் சம் மாறுபட்டிருந்தது. மந்திரியே தந்திரியாயுமிருந்தான். அவன் பட்டந்தான் தளவாய் என்பது. பிராமணர்களே இந்த உத்தியோகத்தை நாயக்கர்கள் காலத்தில் அதிக மாய்ப் பார்த்து வந்தார்கள்.

தளவாய் மதுரைக்கு வெளியே போயிருக்கையில் அதைக் காப்பதற்கு ஒரு சேனைத்தலைவன் வேண்டியிருந் தது. அத்தலைவன் பெயர்தான் தளகர்த்தன் ஆகும். இவனே பிறகு தேசத்தின் போலீஸ் இலாகாவை மேற்பார்த்தான். இவனைப்போன்ற தளகர்த்தர்கள் திரிச்சி, திருநெல்வேலி முதலிய பெரிய நகரங்களில் நியமிக்கப்பட்டார்கள்.

அக்காலத்தில் நாட்டில் பெருஞ் சேனைகளிருக்க வில்லை. சில கிராமங்கள் ஒரு தலைவனுக்குக் கொடுக்கப் படும். அவற்றின் வரும்படியை அவன் அனுபவிப்பான். பல ஆட்களைத் தனக்கு உட்படுத்தி வைத்திருப்பான். அர சன் யாரோடாவது சண்டைசெய்ய விரும்பினல், நாட்டி லுள்ள எல்லாத் தலைவர்களும் தங்களுடைய சேனைக ளோடு குறித்த இடத்தில் ஒன்று சேருவார்கள். இந்தத் தலைவர்கள் பாளையக்காரராய் இருந்திருக்க வேண்டுமென்று தெரிகிறது.

இதனால் நமது ராஜாங்கத்தார் ஏராளமான பொருட் செலவுசெய்து, தேச பாதுகாப்புக்காக இப்போது வைத்திருக்கும் சேனைகள் அக்காலத்து இல்லை. பாளையக்காரருக்கு மானியங்கள் விட்டிருந்ததுபோலவே, வேறு ஒவ்வொரு வேலைக்கும் அவ்வித மானியங்கள் உண்டு. அந்த மானியங்கள் அனுபவிப்பவர்கள் தமது வேலைகளைச் சரிவர நடத்திவந்தார்கள். அப்படிப்பட்ட மானியங்களிற் சில, இப்பொழுதும் நமது ஆங்கில ராஜாங்கத்தாரால் ஆதரிக்கப்பட்டு இருக்கின்றன.

### நியாயம்.

கிராமாதிகாரிகள், சிறு வழக்குகளைத் தாமே தீர்த்து வந்தார்கள். சில கிராமங்களில் கிராமாதிகாரி சேர்ந்த பஞ்சாயத்தார் விவகாரங்களுக்கு நியாயம் கொடுத்தார்கள். அவர்களுக்கு அடங்காத வழக்குகளைக் 'கவர்னர்'கள் தீர்த்தார்கள். வழக்குத் தீர்ப்பதற்காக இவர்களில் எவருக்கும் பணம் கொடுக்கவேண்டியது இல்லை. எனவே, இந்த நியாயங்களெல்லாம் ஒழுங்காய் இருந்தன என்று சொல்ல முடியாது. சிலர் லஞ்சம் வாங்கிக்கொண்டு, அநியாயத் தீர்ப்பும் சொல்லியிருக்கலாம்.

பெரிய ஸீவில், கிரிமினல் விவகாரங்களையும் பாளையங்களின் வழக்குகளையும், மதச்சண்டைகளையும் அரசரே நேரிற்பார்த்தார்கள். இக்காலநீதி ஸ்தலங்களில் நீதிபதிக்கு உதவிசெய்கிற 'அஸேஸர்' 'ஜூரி'; என்பவரைப்போல

அக்காலத்தில் அவ்வேலையைப் பிராமணர்கள் பார்த்து வந்தார்கள். அது எல்லார்க்கும் கொடுக்கப்படமாட்டாது. நன்றாய்ப்படித்தவர்களும், நீண்ட அநுபவமுள்ளவர்களுமே இந்த உத்தியோகம் பார்க்கத்தகுந்தவர்கள். அக்காலத்து, தேச ஆசாரப்படியும், சாஸ்திரப்படியும், ஜாதிமுறைப்படியும் நியாயம் அரசனுற் கொடுக்கப்படும்.

நிலவரி—வரிவசூல் இப்போது போலவே அநேகமாய் நாயக்கர்கள் காலத்தில் இருந்தது என்று சொல்லலாம். கிராமமணியகாரன் வரி வசூல்செய்து, அந்தந்த மாகாணத்தலைவனிடம் ஒப்புவிப்பான். அவன் அதை மதுரைக் கஜானவிற் கொண்டு சேர்ப்பான். மதுரையைப் போன்ற பெரிய நகரங்களிலும், அவற்றைச் சுற்றிய பாகங்களிலும் வரி வசூல்செய்பவனுக்குச் சீமைமணியகாரன் என்று பெயர். நிலவிளைச்சலைச் சில பாகங்களாகப் பிரித்து, ஒரு பாகத்தை அரசன் கொள்வான். அந்தப்பாகம் சாற்பாகத்திலிருந்து அரைப்பாகம் வரை வித்யாஸப்படும். ஆனல் நல்ல அரசர்கள் 6-ல் ஒன்றுதான் பெறவேண்டும். விளைச்சல் இல்லாத காலங்களில், நிலவரி இல்லை. இப்போது ஆங்கில ராஜ்யத்தில் நாம் கொடுக்கும் நிலவரி 6-ல் ஒருபாகத்துக்கும் மிகக்குறைந்ததே. நிலவரியைத் தவிர வேறு வருமானங்களும் அரசனுக்கு உண்டு.

திருமலைநாயக்கர் இறந்த சமயத்தைப்பற்றி முன்னமேயே சொன்னேம். அவருடைய சாவைப்பற்றிப் பல கதைகள் உண்டு. அவைகள் எல்லாம்பொய் என்று தெரிவதால் அவற்றை இங்கே எழுதவில்லை.

இந்த நாயக்கர் தமது சக்கரவர்த்திக்கு விரோதமாய்ப் பல சண்டைகள்செய்தது நன்றி கெட்ட காரியமே. இந்த விஷயம் தவிர, மற்ற எத்தனையோ நல்ல குணங்கள் அவரிடத்தில் இருந்தன. திருமலைநாயக்கரின் தெய்வபக்தியும், மத ஸ்வாதந்தரியமும், தளவாய்களைத் தேர்ந்தெடுக்கும் சாமர்த்தியமும், கடைசியாக அவர் கட்டுவித்த மாடமாளிகை,கூடகோபுரங்களின் பெருமையும் நம்மால் எழுதி முடியுமா? இதனாலன்றோ, அவர் இன்றும் யாவராலும் புகழப்படுகிறார்.

திருமலைநாயக்கருக்குப் பிறகு அவருடைய பிள்ளையாகிய முத்து அளகாத்திரி நாயக்கர் அரசர் ஆனார்.

---

திருமலை நாயக்கர் சரித்திரம்

முற்றிற்று.

---

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
சென்னை-600 008

புதிய சட்டத்திற் கிணங்க
பசுமலை ஹைஸ்கூல் ஹெட் மாஸ்டர்
Mr. J. I மாணிக்கவாசகம் B. A. L. T. அவர்களால்
எழுதப்பெற்றன:

| | | |
|---|---|---|
| புதிய பயிற்சிக் கணிதம் | 1-ம் வகுப்பு | அணா 2 |
| புதிய பயிற்சிக் கணிதம் | 2-ம் வகுப்பு | அணா 2 |
| புதிய பயிற்சிக் கணிதம் | 3-ம் வகுப்பு | அணா 4 |
| புதிய பயிற்சிக் கணிதம் | 4-ம் வகுப்பு | அணா 6 |

பசுமலை ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப் பண்டிதர்
Mr. N. R. சுப்பிரமணிய சர்மா அவர்களால் எழுதப்பெற்ற
மூன்றாவது வகுப்புப் பூகோள சாஸ்திரங்கள்:
(ஜில்லா சரித்திரமும், படங்களும் கூடியது)

| | |
|---|---|
| மதுரை ஜில்லா பூகோளம் (சரித்திரத்துடன்) | அணா 3. |
| இராமநாதபுரம் ஜில்லா பூகோளம் (சரித்திரத்துடன்) | ,, 3. |
| திருநெல்வேலி ஜில்லா பூகோளம் (சரித்திரத்துடன்) | ,, 3. |
| மங்கம்மாள் சரித்திரம் | ,, 1. |
| திருமலைநாயக்கர் சரித்திரம் (படங்களுடன்) | ,, 1½ |
| இராமாயண ஸாரஸங்கிரகம் (படங்களுடன்) | ,, 5 |
| சிறுமணிச்சுடர் 16 சிறு (வேடிக்கைக்கதைகள்) | ,, 1½. |
| இல்லாண்மை (கிரகவிசாரணை) | ,, 4. |

நேச்சர்ஸ்டடி அல்லது இயற்கைப்பொருட்பாடம் (வினவிடை) அணா 3
இராஜாங்கமுறைநூல் (வினவிடை) அணா 3.

அருப்புக்கோட்டை சப் அஸிஸ்டெண்ட் இன்ஸ்பெக்டர்
Mr. V. முத்துசாமி ஐயர் அவர்கள் M. A. L. T. யும்
A. R. சுப்பிரமணிய ஐயர் அவர்களும்
இயற்றிய கதையும் பாட்டும் அணா 0—4—0

இதிற்குறித்துள்ள புத்தகங்களும் இங்கிலீஷ் தமிழ் பள்ளிக்கூடங்களுக்குரிய எவ்வகுப்புப் புத்தகங்களும், கவர்மெண்ட் சட்டப்புத்தகங்களும், இதர பாஷைப் புத்தகங்களும் எமது புத்தகசாலையில் சரசமான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்

உபாத்தியாயர்களுக்கும், வியாபாரிகளுக்கும் தகுந்த கமிஷன் தரக்கூடும்.

**E. M.** கோபாலகிருஷ்ணக்கோன்,
புக்ஸெல்லர், பப்ளிஷர் & கவர்மெண்ட் பதிப்புகளின் ஏஜண்டு,
புதுமண்டபம், மதுரை.